2014 ஜூலை 23]

கட்டடம் கட்டித் தருவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 234, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. சுப்பையா, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

234—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***34771—திரு. இ. சுப்பையா:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதி, அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம், மன்னார்கோவில், வாகைகுளம் மற்றும் பிரம்மதேசம் ஆகிய கிராமங்களுக்கு பிரம்மதேசம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பிரம்மதேசம், வாகைகுளம், மன்னார்கோவில் மற்றும் அயன்திருவாலீஸ்வரம் ஆகிய நான்கு ஊராட்சிகளில் உள்ள 17 குடியிருப்புகளுக்குத் தாமிரபரணி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு 96 இலட்சத்து 31 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பிரம்மதேசம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் இத்திட்டம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்தக்

கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் பிரம்மதேசம், வாகைகுளம், மன்னார்கோவில் மற்றும் அயன்திருவாலீஸ்வரம் போன்ற ஊராட்சிகளின் மக்கள் தொகைக்கேற்ப தேவையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. சுப்பையா அவர்கள்.*

திரு. இ. சுப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீரின்றி அமையாது இவ்வுலகம், அம்மா, இனி நீங்களின்றி அசையாது இவ்வுலகம். (மேசையைத் தட்டும் ஒலி) தடைகளைத் தகர்த்தெறிந்து, தமிழகத்திற்குத் தண்ணீர் பெற்றுத் தந்த தாயின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், தமிழகத்தில் நகரம் முதல் குக்கிராமம் வரை தடையில்லாமல் குடிநீர் வழங்கப்படுகிறது. ஆனால், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் மணல் கொள்ளையர்களால் ஆற்று மணல் கொள்ளையடிக்கப்பட்டதால் குடிநீர் ஆதாரம் குறைந்துள்ளது. மேலும், இக்கிராமங்களில் புதிய குடியிருப்புகள் வந்துள்ளதால், குடிநீர் மேலும் தேவைப்படுகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் மேன்மையான கவனத்திற்கு எடுத்துச் சென்று, இப்பகுதிவாழ் மக்களுக்குத் தட்டுப்பாடின்றி, சுத்தமான குடிநீர் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், கடந்த ஆண்டில் மட்டும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் 83,334 பணிகள் எடுக்கப்பட்டு கடந்த மூன்று ஆண்டுகளில் 1,848.41 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், "அந்தப் பகுதியிலே மேலும் குடிநீர் தேவைப்படுகிறது" என்று கூறியுள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர்*

2014 ஜூலை 23]

அவர்களின் கோரிக்கை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. சுப்பையா அவர்கள்.

திரு. இ. சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மக்களால் நான், மக்களுக்காக நான்" என மக்களுக்காகவே வாழும் மனித தெய்வம், எங்கள் குல தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எனது கோரிக்கை எடுத்துச் செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் சார்பாகவும், தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

திரு. எல். வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோவிலூர் வட்டாரத்தில் 14 வழிவகைக் கிராமங்கள் பயன்பெறுகின்ற தகடி கூட்டுக் குடிநீர்த் திட்டம், 8 வழிவகைக் கிராமங்கள் பயன்பெறுகின்ற முடியனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகிய இரு கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றன. எனினும், தற்போது ஏற்பட்டிருக்கின்ற வறட்சியின் காரணமாக, மேற்படி 22 கிராமங்கள் குடிநீர் பெறுவதிலே பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. எனவே, இந்த இரு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் நீர் உறிஞ்சும் கிணறுகளைச் சுத்தம் செய்வதுடன், உறை கிணறுகளையும் அமைத்தால்தான் 22 கிராமங்களுக்கும் தடையின்றி குடிநீர் விநியோகம் செய்ய முடியும். ஆகவே, மேற்படி பணிகளைச் செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில்,

கடந்த ஆண்டில் மட்டும் அனைத்து மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊரக, உள்ளாட்சி அமைப்புகள்மூலம் கிட்டத்தட்ட 88,247 பணிகள் எடுக்கப்பட்டு, கடந்த மூன்று ஆண்டுகளில் 6,255.34 கோடி ரூபாய் செலவில் சிறப்பான முறையில் பணிகள் முடிக்கப்பட்டு, நடைமுறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின்போது எடுக்கப்பட்ட திட்டங்களுக்கான அரசாணைகள் போடப்பட்ட நிலையில், விட்டுவிட்டு சென்றுவிட்டனர். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அந்தத் திட்டங்களெல்லாம் எடுக்கப்பட்டு, இப்பொழுது முடிக்கப்பட்டு வருகின்றன. மக்கள் பயன்பாட்டுக்கு வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை கண்டிப்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 235, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

235—

கால்நடை மருத்துவமனை

***18565—திரு. மு. ராஜநாயகம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, பெருமருதூர் கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள